**செ. கு. எண்**: 399 **நாள்**: 06.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.11.2012

30.10.2012 அன்று இரவு, மதுரை மாவட்டம், எஸ்.புளியங்குளம் கிராமத்தை சேர்ந்தவர்கள் பசும்பொன்னில் தேவர் சமாதியில் மரியாதை செலுத்திவிட்டு, டாட்டா சுமோ வாகனத்தில் திரும்பி சென்று கொண்டிருந்தபோது, மதுரை அவனியாபுரம் அருகே அவ்வாகனத்தை நிறுத்தி அதன்மீது திடீரென எரியூட்டப்பட்ட பெட்ரோல் நிரப்பிய புட்டிகளை சில சமூக விரோதிகள் எறிந்துள்ளதையடுத்து அவ்வாகனத்தில் பயணம் செய்து பலத்த தீக்காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களில் புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சண்முகவேல் என்பவரின் மகன் திரு. விஷ்ணுபிரியன் இன்று (6.11.2012) மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. விஷ்ணுபிரியன் குடும்பத்தினருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்வதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**